[illegible]

[illegible] 14 — [illegible]


R6mA11, M18GN
N23.14.5
10794

210794

என்ற இவ்விஷயங்களை ஓர் தெய்வீகப்பட்டுப்பூச்சி யாவர் மனத்திலும் புகுந்து புகுந்து வைத்துவிட்டுப் போகின்றதோ எனும்படி வியாபகமாய்ப் பலருமுணர்ந்திருக்கின்றனர்.

இச்சீர்திருத்தத்திற்காக் ஒருவர் தலைகொடுத்து உழைக்க முடியாது போனாலும், குற்றவாளிகளைப் பற்றி உலகில் பொது அபிப்பிராயம் நாளுக்கு நாள் மாறி வருவதைக் கவனித்தலே ஆச்சரியந்தரும். பழிக்குப் பழிவாங்கும் எண்ணம் மறைந்து நாடோறும், குற்றவாளிகளைச் சீர்திருத்தி நல்வழிப்படுத்தும் எண்ணமே பரவிவருகிறது. ஒவ்வொருவனும் தன் நாட்டைக் காக்கவேண்டியது ஓர் கடமையாவது போலவே நாடும் தன் குடிகளில் ஒவ்வொருவரையும் காப்பது கடமையேயாம். ஆகையால், ஒருவன் பொல்லானேயானாலும், அவனும் நம் நாட்டானே என்றுணர்ந்து, அவனாலும் நாடு நலம் பெறக்கூடிய வழிகளை அவனுக்குக் கற்பித்து உதவுதல் அவசியம். தண்டனைக்காகச் சிறைப்பட்டவர்களையும், அவர்கள் பிறகு உபயோகமுள்ளவர்களாய் வாழும் முறையில் பழக்குதல்வேண்டும். நாட்டின் க்ஷேமத்தையும் செல்வத்தையும் கருதி, எவனாலும் பாதகமின்றிச் சாதகமே பெறுமார்க்கத்தைத் தேடல் வேண்டுமன்றோ?

சென்ற சில மாதங்களுள் ஆங்கிலதேசத்துச் சிறைச்சாலைகளையும், கைதிகளையும்பற்றி மூன்று முக்கியமான புத்தகங்கள் வெளிவந்துள. அவற்றால் துலங்கும் முக்கியமான பல பெரு விஷயங்கள் பொதுஜனங்களால் சிந்திக்கத்தக்கவை. அவைகளில் அனேக விஷயங்கள் ஒளிக்காமல் வெளியிடப்பட்டிருக்கின்றன. நம் சிறைச்சாலை முறையில் அனேகங்குறைபாடுகளைத் தீர்க்கவேண்டும் என்பது அவற்றால் ருசுவாகிறது. ஆகாசயாத்திரை, சாராயங்காய்ச்சுவது, எண்ணெய்க்கிணறுகளுள்ள இடங்களைக் கண்டுபிடித்துத் தோண்டுவது, சாயவேலைகள் இவ்வாறான பற்பல கலைகளெல்லாம் ஸர்வகலாசாலைகளில் படிப்பிக்கப்பட்டாலும், குற்றங்களேற்படக்காரணமென்னவென்று கண்டு அதை வேரறுக்கும் வழியை விசாரியாதது விந்தையே! என்று பலவருஷங்களாக இம்முக்கியமான துறையில் முயலும் மிஸ் ப்ரை என்பவர் மருத்துவப் பெண்களின் மஹாஸங்கத்தில் கூறினர். மேலும், பொதுவாக குற்றவாளிகளைச் சீர்திருத்தி திரும்ப ஜனஸமுதாயத்தில் சேர்த்துக்கொண்டு ஒருமித்து வாழ்வது அசாத்தியமல்லவென்கிறார். அதற்குச் சாதகமாக மனிதரிடத்தில் உள்ள மனம்



சரீரம் இரண்டின் குணகர்மங்களையும் ஒருங்கே பரிபூர்ணமாய்த் தெரிந்துகொள்ளல்வேண்டும். நாட்டின் நன்மை நாட்டாராகிய நம்மைப் பொறுத்தது என்பதை ஒப்புக்கொள்வீராகில், பழிவாங்கும் துர்ப்புத்தியை நாம் ஒழிக்கவேண்டும்.

ஒரே ஆத்மாவின் சரீரமும் அங்கங்களும் முறையே அதன் ஓரோர் அம்சமாவதுபோல, ஓர் நாடும் அந்நாட்டாரும் ஒரே புருஷனின் ஸமஷ்டி வியஷ்டி அம்சங்களாம். எவனும் தன்னை எவ்வளவு இகழ்ந்துகொண்டாலும், தன்னைத்தானே பழிவாங்க நினைக்கிறதில்லை. நாம் என்ன பிரமாணத்தைக்கொண்டு சிற்சில காரியங்களைக் குற்றமென நிர்ணயிக்கிறோம்? இதுதான் விளங்கவில்லை. ஓரோர் யுகத்தில் ஏதாவதொன்றை மஹா பாதகமாக எண்ணி இகழ்வதும், மற்றபாதகங்களை ஆதரிப்பதுமாகத்தான் இருந்திருக்கிறது. நாகரிகம், வழக்கம் என்பவைகளைப் பிரமாணமாகக்கொண்டதே மேற்சொல்லிய நிலைமைக்குக் காரணமாயிருப்பதாகத் தோன்றுகிறது.

உதாரணமாக குடிவெறி மயக்கத்தால் செய்யப்படும் குற்றங்களுக்கு சில தேசங்களில் அனேகமாய் அற்பமான சிக்ஷையே விதிக்கப்படுகின்றது. குடி ஒரு குற்றம். மயக்கத்தில் செய்தது இன்னொரு குற்றம். ஆக இரண்டு அக்ரமங்களுக்கு அற்பதண்டனை போலும்! பலவிதத் திருட்டுக்களுக்கும் கொள்ளைகளுக்கும் கடுமையான தண்டனை விதிக்கப்பட்டாலும், ஓர் பெண்ணின் கற்பைக் கவருதலுக்கோ விவரமறியாப் பெண் ஒருத்தியை வஞ்சித்தழைத்துப் போதலுக்கோ விதிக்கப்படும் தீர்ப்பு அற்பமேயாம்.

இம் மாறுபாடுக்களை மொத்தமாய் மூன்று வகுப்புக்களில் பிரித்தெழுதலாம்.

(1) குற்றங்களின் வெவ்வேறு வகைகளும், அவற்றில் சில யாவராலும் இகழப்படுவதேன் சில மன்னிக்கப் படுவதேன் என்னும் விசாரணையும்.

(2) குற்றம் என்ன காரணத்தால் செய்யப்படுகிறது?

(3) பொதுவாய்க் குற்றவாளிகளும் கைதிகளும் நடத்தப் படும் விதம்.

இவற்றுள் முதலாவதை எழுதுதல் சிரமமானது. ஏனெனில் அந்தந்தக் காலத்துப் பொது ஜன அபிப்பிராயத்தாலேயே இது குற்றம் குற்றமல்லவென்பது தீர்மானிக்கப்படவேண்டியிருக்கிறது. உலகில் சோதரபாவம் மேன் மேலும்

ஓரோர் படியாக நிறைவேறிவரும் போதெல்லாம், இப்பொது ஜன அபிப்பிராயம் மாறிக்கொண்டேவரும். பிறர் "உனக்குச் செய்ய விரும்புவதையே நீ பிறருக்குச் செய்யவேண்டும்" என்ற முதுமொழியாகிய ஸஹோதரதர்மத்தை வற்புறுத்தினாலன்றி, இது குற்றம், குற்றமல்லவென்பது தீர்மானமாகாது. ஸ்திரீ புருஷர்கள் காமநுகர்ச்சியினிமித்தம் செய்யும் குற்றங்கள் முக்கியமாய் சாதாரணமென மன்னிக்கப்படுகின்றன. அவைகளைப் பற்றி அதிகம் பேசுவது கிடையாது, அவைகளை வெகு தயையுடன் கருதல் வழக்கமாயுள்ளது. இக்குற்றங்கள் செய்பவர்கள் வெகுவாய் நிறைந்திருக்கின்றனர் எனினும் பொதுஜன அபிப்பிராயத்தால் இக்குற்றங்களை ஒளிப்பதே நல்லது என்றேற்பட்டிருக்கிறது. இவ்வாறான குற்றத்தின் தன்மையை உள்ளபடி எடுத்துக்காட்டிப் பொதுஜனங்களுக்கு உண்மை விளக்கப்படுமானால், அது ஓர் சிலாக்கியமான காரியமே. யுத்தத்தின் பயனாக இக் குற்றம் மிகவும் மிஞ்சிப் போயிற்று, ஒவ்வொருயுத்தத்திற்கும் பிறகு இதே மாதிரி தான் இக்குற்றம் அதிசரிக்கிறது. மேல்பசட்டிலேயே பொது ஜனங்கள் வசப்பட்டுக்கிடக்கிறார்களாகையால், அதற்கு விரோதமாக அவர்கள் அபிப்பிராயப்படுகிறதில்லை. இத்தகைய நாகரிகத்தை அநுசரிக்கிறவர்கள் இக்குற்றங்களை எளிதில் மன்னிக்கவே நேரும். காமநுகர்ச்சியின் நாநாவித விபரீதக்குற்றங்களை வேஷாக் வாலிபர்கள் ஒரு பொருட்டாக எண்ணுகிறதில்லை. ஆகையால் அவைகளை எளிதில் மன்னித்தல் வழக்கமாயிருக்கிறது. இப்படி இரகசியமாய் நடக்கும் அக்கிரமங்களை வெளிப்படுத்தி, ஜனஸமுதாயத்தின் ஊழல்களை எடுத்துக்காட்ட மிகச்சிரமப்பட்டு பிரயத்தனங்கள் நிகழ்கின்றன. ஸ்திரீகளைப் போலீஸ் உத்தியோகத்திற்கு நியமித்தால் சாதகமேற்படுமென்று இதற்காக முயற்சிகள் ஆரம்பிக்கப்படவே, வெகுபேர்கள் இவ்வாலோசனையை தீவிரமாய் எதிர்த்தனராம். இவ்வேற்பாட்டால் பெரும்பயன் விளையாதென்று எண்ணவோ இடமில்லை. பயனற்ற யோசனையெனில் அதைத் தீவிரமாய் எதிர்க்கவேண்டிய அவசியமில்லையே. நகரபரிபாலன ஸபைகளிலும், நியாயஸ்தலங்களிலும் எவ்வதிகார ஸ்தானங்களிலுமே ஸ்திரீகள் உத்தியோகம் வகிப்பதனால், உலகத்தில் இவ்வகையான துருசு நீங்குகிறது ஓர் பிரதான நன்மையாயுளது.

(2) குற்றத்தின் ஆரம்பகாரணங்களைப் பற்றி ஆராய்ச்சி வெகுவாய் வைத்தியர்களுள் நடக்கிறது. நான் முதலில்



சொன்ன மூன்று புஸ்தகங்களில் இரண்டு விசேஷமாய்ப் படிக்கத்தக்கவை. குற்றவாளியின் மநநிலையைப்பற்றி எழுதிய டாக்டர் ஹாம்லின் ஸ்மித் என்பவரும், குற்றத்தைப் பற்றிய மநோதத்துவ சாஸ்திரத்தை எழுதிய டாக்டர் பேர்னார்டு ஹாலேண்டரும் நல்ல கீர்த்திமான்கள். இருவரும் தத்தமக்குரிய விசேஷ சாமர்த்தியத்தோடு ஆராய்ச்சி செய்திருக்கின்றனர்.

டாக்டர் ஹாம்லின் ஸ்மித் அவர்கள் எழுதிய புஸ்தகத்தில், குற்றவாளியைத் திருத்தமுடியாமல் தவிப்பதற்கு, மனித இயற்கையைப் பூரணமாய் ஆராய்ந்தறியாததே காரணமென்று கூறுகிறார். அவர் விஷயங்களை வெகுவாய்த் தெரிந்துகொண்டது சிறைப்பட்டவர்களிடமிருந்தானாலும் பொதுவாய் செயிலுக்கு வருமுன் அவர்கள் எவ்வாறு குற்றத்திற்குள்ளாகிறார்கள் என்பதையே தம் புஸ்தகத்தில் அவர் விசேஷமாய் விரித்துரைக்கிறார். "குற்றவாளிகள் சீர்திருந்தச்சிறைச்சாலை யாது செய்கிறது?" என்று வினவுகிறார். இன்னொரு கிரந்த கர்த்தா டாக்டர் பேர்நார்டு ஹார்லண்டர் என்பவர் அபிப்ராயத்தில், தப்பு நடத்தையுள்ள பையன்களையும் பெண்களையும் பரீக்ஷித்துச் சிகிச்சை செய்யும்படியான வைத்தியசாலைகள் இருத்தல் வேண்டுமென்கிறார். மேலும் தயாதாக்ஷிண்யத்தையும் நியாயத்தையுங்கருதி அவர்களை வைத்திய சாஸ்திரமுறையாகவும் மநத்தத்துவ சாஸ்திரமுறையாகவும் பூரணமாக ஆராய்ந்து காரணங்களைத் தெரிந்துகொள்ளவேண்டியது அவசியம். அப்படித் தெரிந்து செய்யும் நிவர்த்தி உபாயங்களால் தான் அவர்கள் மறுபடிக் குற்றத்தில் விழார்கள். ஜனஸமுதாயத்துக்கும் நன்மை உண்டாகும். இப்புத்தகத்தால் பெருங் கிளர்ச்சி உண்டாயிருக்கிறது. இங்கிலந்திலுள்ள சிறைச் சாலைகளின் நிலை உள்ளது உள்ளபடி தெரிகிறது. இப் புஸ்தகங்களின் விஷயங்களெல்லாம் ஆங்கிலநாட்டை அநுசரித்திருந்தாலும், குற்றங்கள், குற்றவாளிகள், சிறைச்சாலைகள் இவைகளைப் பற்றிப்பொதுவாய் முக்கியம் தெரிந்துகொள்ளத்தக்க விஷயங்கள் அநேகம் இவைகளில் காணலாம். ஆகையால் அவைகளைப் பலதேசங்களிலும் பற்பலர் படித்து மதிப்புரை எழுதுகின்றனர். அதனால் அநேக தேசங்களில் இவ்விஷயம் விவகரிக்கப்பட்டுவருகிறது.

(3) இப்புத்தகங்களில் குற்றவாளிகளை நடத்தும் முறை கொஞ்சம் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. குற்றத்

தின் காரணத்தையும் குற்றவாளியைநடத்தும் விதத்தையும் தெரிந்துகொள்வது இப்பெரும் விஷயத்தில் தேர்ச்சிபெற மிக அவசியமானது. சரீர அசௌக்கியத்தாலோ மனவியாதியாலோ வேறெந்தக்குறைபாட்டினாலோ ஒருவன் குற்றம் செய்வானாயின், அவன் விஷயத்தில் நாம் முற்றும்வேறான அபிப்ராயமடைகிறோம். பழிவாங்கும் எண்ணம் அகன்று போகிறது. கூன், குருடு, நொண்டி, மூடமானவர்களிடத்தில் நம் எண்ணம் எவ்வாறாக உள்ளது? அவர்களால் ஜனஸமுதாயத்திற்கு தீமையொன்றும் விளையாதிருக்குமானால், அவர்களுக்கு அவசியமான பல சௌகரியங்கள் செய்துகொடுத்து அவர்கள் சுகமுறவாழும்வண்ணம் நாம் முயலவேண்டும் என்றெண்ணுகிறோம். இம்முறையிற் சிந்திக்குங்கால், குற்றவாளிகள் ஏதோ சரீரவியாதியினாலோ மனவியாதியாலோ தான் குற்றஞ்செய்கின்றனர் என்றுணர்ந்து அவர்கள் சீர்திருந்தும் வழியில் நாம் அவர்களை நடத்துகிறோமா அல்லது அவர்கள் இன்னும் தாழ்வுறும்படியான விதத்தில் நாம் அவர்களை நடத்துகிறோமா? என்ற கேள்வி பிறக்கும். அவர்களைத் தம் நடத்தைக்கு ஜவாப்தார்களாகக் கருதுகிறோமா? அல்லது அவர்கள் உத்தரவாதிகளல்லவென்று நினைக்கிறோமா? பொறுப்புத் தெரியாதவர்களுக்குக் கடினமான வேலை நாம் கொடுக்கிறதில்லையே. வியாதிஸ்தர்களை நாம் தனியே அடைத்துப்போடுவதும் இல்லை. வம்படி அடித்தலும் கிடையாது. அவர்களை நாம் தூக்கில் போடுகிறதும் இல்லை. குற்றவாளிகளை ஒதுக்கிவைத்தும் தீவாந்தர சிக்ஷை விதித்தும் நாட்டைக் காக்கிறோம். அதனால் அவர்கள் நல்லவர்களாகி நாட்டுக்கு நலம் புரியும் நிலைமையை அடைவதில்லை. ஒரு ஜனஸமுதாயத்தில் சிசுப்பிராயமாயுள்ள பலஹீனமான அநாதைகளுக்குரிய தயவை நாம் காட்டுகிறோமில்லை.

குற்றவாளியைச் சீர்திருத்துவதிலெல்லாம் பின்வரும் கருத்தே உள்ளது. அவன் சிறையிலிருக்கும் காலத்தில் ஏதாவதொரு தொழிலில் பயின்று அதில் நாட்டமுடையவனாய் அந்த உத்தேசத்துடன் ஜனஸமுதாயத்திற் கலந்து உபயோகமுள்ள ஓர் அங்கத்தினனாக அமரவேண்டுவதே கருத்தாம். வாலிபக்குற்றவாளிகளைப் பழக்கும் முறை இதற்குப் போதுமான சான்றாம். நாளுக்குநாள் எல்லாத் தேசங்களிலும் குற்றஞ்செய்த சிறுவர் சிறுமியரைத் தண்டிப்பதில்லையெனும்



வழக்கம் பிரபலமாகிறது. அவர்களைப் படிப்பித்து அவர்களுக்கு தொழில் கற்பித்துக்கொடுப்பதோடு, அவர்கள் நல்லெண்ணமுடையராய் வாழத்தொடங்கும்படி உத[illegible]கிறது. எத்தனை வயது வரைக்கும் சிறுவர் என்னலாமெனில் அது வெவ்வேறு தேசங்களில் வேறுபடுகிறது. அமெரிக்காவில் ஓர் மாகாணத்தில் 25 என்கிறார்கள். மற்றொன்றில் 18 முதல் 21 வயதுவரை என வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

உயிர் வாங்கும் தண்டனையைப்பற்றிப் பேசவேவேண்டாம். ஏனெனில் அதனால் நாடு தப்பித்துக்கொண்டாலும், குற்றஞ்செய்த தன் மக்களை எவ்வாறு பரிபாலித்துச் சீர்திருத்துவதாகிறது? பொல்லாத சேயெனில் தாய் தள்ளல் நீதமோ? இதுபற்றிச் சிலதேசங்களின் தீர்மானம் என்னவென்பது கவனிக்கத்தக்கது:—

ஆஸ்ட்ரியாவில் ஒழிந்தது. பெல்ஜியத்தில் சட்டவாயிலாக அதை ரத்துசெய்யாவிட்டாலும் சென்ற 60 வருஷங்களாக கொலைத்தண்டனை விதிக்கப்படவில்லை. பல்கேரியாவில் வழங்கி வருகிறது. டென்மார்க்கில் சென்ற 30 வருஷங்களாகக் கொலைத்தண்டனை விதிக்கப்பெற்றதில்லை. ஆனால் இன்னும் சட்டம் ஒப்புக்கொள்கிறது. இங்கிலாந்தில் இன்னும் வழக்கம் உள்ளது. பிரான்சில் அப்படியே. ஜர்மனியில் அப்படியே. ஹாலண்டு தேசத்தில் 1870-ஆம் ௵த்தில் தள்ளுபடி செய்துவிட்டார்கள். இத்தாலியாவில் 1889-ஆம் ௵த்தில் தள்ளுபடிசெய்தார்கள். நார்வேயில் 1902-ஆம் ௵த்தில் தள்ளுபடி செய்யப்பட்டது. போர்ச்சுகலில் ஒழிந்தது. ருமேனியாவில் 1864-ஆம் ௵த்தில் நீக்கப்பெற்றது, ஸெர்பியாவில் வழக்கம் உள்ளது. ஸ்பெயினிலும் அப்படியே. ஸ்வீடெனில் 1921-ஆம் ௵த்தில் ஒழிந்தது. ஸ்விட்ஸர்லந்தில் சில மாகாணங்களில் உள்ளது, மற்றவைகளில் ஒழிந்தது. அமெரிக்க ஐக்கியமாகாணங்களில் சிலவற்றுள் வழக்கம் இருக்கிறது, மற்ற அனேகம் ஒழித்துவிட்டன.

இந்த ஜாப்தாவிலுள்ள தேசங்களிலெல்லாம் குற்றவாளியை ஆயுள்முழுதும் தண்டனைக்குரியவனாகச் செய்கின்றனர். இந்த ஜன்மத்தில் தனக்கு விடுதலையுண்டு, தான் சீர்திருந்தலாம் என்று எண்ண இடமில்லாமல் குற்றவாளி தண்டிக்கப்படுகிறான். அமெரிக்க ஐக்கிய மாகாணங்களில் இரண்டொரு நாடுகளில் காலவரையறை விதித்துத் தண்டிக்காமல், எவ்வளவுக்கெவ்வளவு சீக்கிரம் குற்றவாளியானவன் தன் வேலைத்திறத்தாலும் நன்னடத்தையாலும், சமாளிக்கும் தன்மையா

வமாய்ச் சிரமப்பட்டு உழைக்கும் உபகாரகைங்கரியங்களால் தான் விடுதலையுண்டு, விடுதலை பெற்றிருப்பதே மனிதலக்ஷணம் என்று ரோஸோ என்ற ஒருவர் வெளியிட்டது முதலாக, ஜனஸமுதாய உணர்ச்சி அதிகரித்தது. மனிதன் எப்போதும் ஸமுதாயத்தை நாடிநிற்பவன். ஸமுதாயத்திலிருந்து நன்மை பெற விரும்புவோர் யாவரும் முதன் முதல் சிரமப்பட்டுத்தான் ஆகவேண்டுமாயினும், படிப்படியாகக் காலாந்தரத்தில் தன் தியாகத்தைச் சிறிதும் சிரமம் பாராமல் ஓர் பாக்கியமெனக் கருதியேயியற்றுவார். ஸோஷாலஜியில் அடங்கியுள்ள சாஸ்திரங்களின் உத்தேசம் எவ்வாறு மாறிவந்திருக்கிறதென்பதை இனி விசாரிப்போம்.

இவ்வுலகப் பொருளைச் சேகரிக்கும் முறை கூறுவதைத் தான் அர்த்தசாஸ்திரம் என்கிறோம். இவ்வுலகில் அநேகர் படிப்பும் பக்தியும் வாய்க்கப் பெறாமலே வெளியுலக அனுபவத்தால் எதிர்ப்படுவனவற்றையே சரியான உண்மைகளாகக் கொண்டு நடக்கிறவர்களாகையால், இது வெகுவாய் எல்லோருக்கும் கைக்கு மெய்யாய் பிரயோசனந்தரும் சாஸ்திரமாகிறது. பிறனை வஞ்சித்தாவது பணம் பெறவேண்டும் என்பது பழைய கொள்கையாயிருந்தது மாறி, பிறன் ஒருவன் கஷ்டப்பட்டால் அதை நாமும் கலந்தனுபவிக்க வேண்டியவர்களே என்ற அபிப்ராயம் தலைப்பட்டிருக்கிறது. உலகவாழ்க்கையின் போராட்டத்தில் 'வலுத்தவன் கையிற் பணியாரம்' என்றபடி எவனுக்கு சாமர்த்தியமும் பலபராக்கிரமமும் உண்டோ அவனே நீடித்த சுகம் பெறலாமென்ற கொள்கை முன்னே இருந்தது. இப்போதோ எல்லோரும் ஒத்துழைத்து, எல்லோரும் நன்மை பெற்று எல்லோரும் ஒருங்கே சுகம் பெற வேண்டுமென்கிற கருத்தோடு பற்பல விதமான தொழிலாளர்கள் அவரவர்கள் சங்கங்களாகச் சேர்ந்துகொண்டு, ஏகோபித்து முயன்று பயன் பெற்று வருகிறார்கள். ஏழைகளையெல்லாம் தன் வசமாக்கிக் கொண்டு தான் ஸகல வித அந்தஸ்து பலபராக்கிரமங்களோடு கூடியவனாய் ஜன ஸமுதாயத்திற்குத் தலைவனாயிருப்பதனால் தான் ஸமுதாயம் க்ஷேமமடையும் என்ற எண்ணம் ஒழிந்து, தன் வேலைக்காரர்கள் வயோதிகதசையடைந்து வேலை செய்ய மாட்டாத சமயத்தில் அவர்களுக்கு பென்ஷனும், பஞ்சகாலத்தில் கஷ்டம் வராதபடி பாதுகாப்பும், வேலையையிழந்து நிற்பவர்களுக்கு வேலை வாங்கிக் கொடுப்பதற்கான ஆபீஸ்களும் ஏற்பாடு செய்யப்பட்டு



வருகின்றது. தன் க்ஷேமத்தை முதலில் தேடிக் கொண்டு பிறகு தான் உலகிற்கு க்ஷேமத்தைச் செய்யலாமென்ற எண்ணம் தவிர்ந்து, பரோபகாரத்திற்காகவே நாம் வாழ்கிறோம் என்ற எண்ணமே மனித வர்க்கத்தார் கடைப்பிடிக்க வேண்டிய லக்ஷியம் என்பதாகக் கொள்ளப்படுகிறது.

தேசபரிபாலன நகரபரிபாலன சாஸ்திரங்கள் அடுத்தபடியாக வருகின்றன. அவைகளால் மனிதனின் கல்வியறிவொழுக்கம் மேம்படுகிறது. கல்வியறிவொழுக்கத்தில் தாழ்ந்தவன் தன்னலமே பெரிதுங் கருதுவான். தன் தேச நன்மைக்காக பிறருக்கொரு தீமை செய்தலும் தகும் என்ற எண்ணம் ஒழிந்து போய், இப்போது நாம் கைக்கொள்ளும் உபாயங்களும் கௌரவம், நீதி, சமயுக்தி இவற்றிற்கிணங்கி யிருக்க வேண்டும் என்ற கருத்து, இப்போது நிலைபெற ஆரம்பித்திருக்கிறபடியால், யுத்தமெனும் அரிகண்ட பயமில்லாமல் ஸர்வதேச ஐக்கிய சங்கம் முற்றும் நிறைவேறும் என்றெண்ண இக்காலத்திலிடமுள்ளது.

நகரபரிபாலன சாஸ்திரம் புதிதாய் ஏற்பட்டுள்ளது. அதனால் ஜன நாயக ஆட்சியின் தத்துவத்தில் உலகத்தார் தயாராகி வருகிறார்கள். இதற்கு அவசியமான குணங்கள் மூன்று. தீவ்ர உழைப்பு முதலாவதாக வேண்டும். அநேகர் "நிராசிரயமாய்" இருக்க வேண்டும் என்றும், "அதமம் சேவகவிர்த்தி" என்றும், "கொஞ்சத்துக்கு கொஞ்சமாவது ஸ்வாதீனம் வேண்டாமா?" என்றும் சொல்லிக் கொண்டு தனக்கொரு கஷ்ட நஷ்டமுமின்றிப் பிறர் அன்னத்தைச் சாப்பிட்டு வாழும் சோம்பேறித்தனம் அதனால் அடியோடழியும். பொதுஜன ஊழியத்தில் தேர்ச்சி இரண்டாவது நற்குணமாம். இதனால் ஒவ்வொருவரும் தத்தமக்கு நெருங்கின சம்பந்தமுடைய விஷயங்களை மட்டும் கவனித்துக் கொள்வதோடு நில்லாமல், தன் தேசத்தையும் உலகத்தையும் ஓர் பெருங்குடும்பமாகவும் அதில் தன்னை ஒரு அங்கமாகவும் எண்ணி ஒழுகவேண்டும். எப்பொழுதும் விவேகத்தை உபயோகிப்பது மூன்றாவது நற்குணம். இதனால் நாம் நாள் தோறும் செய்யும் காரியங்களில் மநம் தாமஸப்பட்டுக் கிடக்காமல், கூடவே தொழில்படும். அதனால் மனோலோகமும் சீர் பெறும், ஆயிரக் கணக்கானவர்களுடைய விவேகம் அங்கு ஒன்று கூடுகிறபடியால், ஒருவருடைய விவேகம் மற்றொருவர்க்குப் பயன்படாமற் போகாது. ஒருவர் நினைக்கும் சிந்தனைகளெல்லாம் அவரவரோடு ஒழிவனவல்ல; மற்றவர்களை

யும் சம்பந்திக்கின்றன என்பது மதத்தத்துவ சாஸ்திர சம்மதமான உண்மை.

சட்டமும் நாளுக்கு நாள் அதிகமாகச் சீர்திருத்தம் பெறுகிறது. கண்டிப்பாய் ஒதுக்கிவைக்க வேண்டிய குஷ்டரோகியைப் போல் குற்றவாளியைக் கருதாமல் அவனும் நம் சோதரனே என்ற அபிப்பிராயத்தால், ஏற்கெனவே, அநேக தேசங்களில் உயிர் வாங்கும் தண்டனை ஒழிந்து போயிற்று. குற்றவாளிகளை நடத்தும் முறையும் காலக்கிரமத்தில் திருத்தப் பெற்று வருகிறது. அவ்வாறே வோட்டு உரிமைக்கு தகுதியற்றவர்களென்று இதுவரை கருதப் பெற்றவர்களுக்கும் இப்போதவ்வுரிமை கொடுக்கப்படுகிறது. ஜநநாயகத்துவமென்னும் சோதரபாவம் ஆழ்ந்து வேரூன்றிக் கிளைத்துப் பரவிவருகிறது.

ஸ்ரீமான் ஜினராஜதாஸர் "வருங்காலத்திற்குரிய நற்செய்தி" என்னும் கிரந்தத்தில் சொல்லியபடி மதம் என்பது கிருஷ்ண பகவான் அல்லது கிறிஸ்து பகவான் என்ற ஓர் தனித்தெய்வத்தின் வழிபாடு என்ற உணர்வு ஒழிந்து, மனிதவர்க்கத்திற்காக உழைத்தலே கடவுள் வழிபாடும் மதமுமாம் என்ற கொள்கை நிலைபெற்று வருகிறது.

கடவுளை வெறுங் கிரியாரூபமாய்ப் பூஜிப்பதை விட ஆத்மஞான வாழ்வே மேன்மையான பூஜை என்றதாக உலகினர் மேன் மேலும் உணர்ந்து வருகின்றனர். அதாவது எல்லா ஸ்திரீபுருஷர்களும் ஒரே மனிதகுலத்தில் பிரிக்கப்படாத சகோதர சகோதரிகள் ஆவர் என்ற உணர்ச்சியேயாம். இவ்வுணர்ச்சியானது உலகமுழுதும் பரவி, பரோபகாரிகளையும் ஜனஸமுதாய ஊழியர்களையும் தூண்டி வருவதோடு, ஸர்வதேசங்களுக்கும், ஸ்வராஜ்யங்களுக்கும் பொதுவான ஒரே மஹாராஜ்யத்தை ஸ்தாபிக்கலாம் என்ற உத்ஸாஹத்தையும் ஊட்டி வருகிறது.........கடவுள் மனிதனுக்கு வெகு விதங்களில் காட்சி கொடுத்து அறிவுறுத்தி உபதேசிக்கிறார். இந்தியாவில் முற்காலத்தில் அவர் பிரஹ்ம, விஷ்ணு, ருத்திரர்களாகப் பூஜிக்கப் பட்டனர். அவரே கிறிஸ்தவர்களுள் பிதாவாகவும், சுதனாகவும், பரிசுத்த ஆவியாகவும் கொண்டாடப்படுகிறார். ஆனால் இப்போது அவர் முற்காலத்தியரூபங்களை விட வேறான சோதர மனிதனாக விளங்குகிறார்.

ஆனால் இவ்வெல்லாவித மாறுதல்களும் இப்போது உடனே வந்து விட்டனவென்று நான் சொல்லவில்லை. சமயம்



நிறைந்த பழைய உலகத்தின் கெட்ட சம்பிரதாயங்களையும் பழக்க வழக்கங்களையும் கொஞ்சங் கொஞ்சமாக அறச்செய்து அச் சீர்திருத்தங்கள் யாவும் படிப்படியாய் வந்தே தீரும். அவைகளால் தான் ஒற்றுமையுணர்வும் பரஸ்பர நேர்மையும் உண்டாக வேண்டும் என்பதை எவ்வளவுக்கெவ்வளவு உணருகிறோமோ, அவ்வளவுக்கவ்வளவு ஜனஸமுதாயத்தில் சகோதர வொற்றுமை சீக்கிரம் நிலைக்கும். "ஈசன் எங்குமுளனாகையால் மனிதகுல மனைத்தும் ஒன்று" என்ற இப்பரமதத்துவம் உலகிற்கு ஏற்கெனவே ஹிந்து மதத்தால் வெளியிடப் பெற்றதேயாம்.

---

## ஸர்வஜன சோதரதர்ம விஜயம்.

---

டிசம்பர் 1923 11-ஆம் வாரம்.

### தள்ளுண்ட வகுப்பார்.

தள்ளுண்ட வகுப்பார்களைப்பற்றி ஆலோசிக்க வேண்டிய விஷயம் ஒவ்வொரு தேசத்திலும் அதற்குத் தக்கபடி ஒருவிதமாயிருப்பினும், நம் தேசத்தில் அது உடனே கவனிக்கத் தக்கதாயிருக்கிறது. மேல்நாட்டார் தமக்குள் கீழ்ப்பட்ட நிலையிலிருப்பவர்களுக்குத் தாம் செய்ய வேண்டியதை யுணர்ந்து படிப்படியாய்த் தம் கடமைகளைச் செய்கின்றனர். நாம் நமக்குள் ஆறிலொரு பங்கு ஜனத்தொகையின் தாழ்மையும் எளிமையும் இன்னவென்றே உணர்ந்தவர்களாகத் தோன்றவில்லை. சீர்திருத்தத்தின் அவசியம் ராஜீய உழைப்பாளிகளுக்குத் தெளிவுற்றது போல, கல்வித் துறையில் உழைப்பவர்களும் சிறிது தெரிந்து கொண்டிருக்கிறார்கள். ஜனஸமுதாயச் சீர்திருத்தத்தில் மட்டும் சுத்தமாய்க் கவனம் போதாது. இவ்வகையில் சீர்திருத்தம் இங்குமங்கும் ஏதோ நிகழ்கிறது. அது மிகக் குறைவாயிருக்கிறது.

ஜாதியாலோ செல்வ நிலைமையாலோ ஏதாவதொன்றாலே தான் அவர்களுக்குத் தாழ்மை ஏற்பட்டிருக்கிறது. உலக சரித்திரத்தில் ஓர் வீரியமுள்ள ஜாதியார் வந்து மற்ற ஒரு க்ஷீணமான ஜாதியாரைக் கொண்டு வேலை வாங்கி இலாபம் பெறுவதை அநேக சந்தர்ப்பங்களில் அறிந்திருக்கிறோம். இந்தியாவிலுள்ள தீண்டாச் சாதியார்களும், ஸ்வதேசத்திலிரு

ந்து பிடித்திழுத்துக் கொண்டுபோய் அமெரிக்காவில் வைக்கப்பட்ட நீக்ரோவர்களும், காபிர்கள் முதலியவர்களும் அவர்கள் ஸ்வதேசங்களில் உள்ள நிலையுமே, வாலிப பலத்தோடு விளங்கிய மனிதவர்க்கத்தின் சுயநலத்தையும் பேராசையையும் நிரூபிக்கத்தக்க சரியான உதாரணங்களாம். ஜடசாலிகளான, பலிஷ்டர்களுடைய நாகரிக முறையிலும் அந்தஸ்திலும் ஈடுகட்டி வரமுடியாதவர்கள் இவ்வாறு கஷ்ட தசையாலும், அறிவின்மையாலும் அசுத்தத்தாலும் தள்ளுண்டவர்களாய்க் கிடக்கின்றனர். மனிதருளெல்லாம் விளங்கும் ஆத்மா ஒருவன் என்ற உணர்வைக் கொள்வோமானால் தான் இக்கஷ்டத்திற்கு விமோசன முண்டாம். ஸ்ரீ கிருஷ்ணபகவானுடைய ஞானோபதேசத்தைப் பிரமாணமாக வைத்துத் தீர்மானிப்போமாயின் இந்தியராகிய நாம் அனைவரும் அறிவிலிகளே. ஏனெனில் ஆதிதிராவிட சரீரத்தையும் கோவிலாகக் கொண்டு விளங்குகிறவர் கடவுள் என்பதை உணருகிறோமில்லை.

ஐரோப்பாவில் தள்ளுண்ட வகுப்பார்கள் ஏற்பட்டதற்குக் காரணம் செல்வ நிலைமை மாறியதனாலேயேயாம். தொழிற்சாலைகளிலெல்லாம் இயந்திரங்கள் அமைக்கப்பட்டு முன்னினும் பத்துமடங்கு சாமர்த்தியமாய் ஆட்களின்றி வேலைகள் நடந்து வருவதைக்கண்ட பெருமுதலாளிகளின் பேராசையால் அநேகத்தொழிலாளிகளுக்கு வேலை நின்றுபோயிற்று. எத்தனை வேலையாட்கள் சேர்ந்து செய்தாலும் இயந்திரத் தொழிற்சாலைகளுக்குச் சமமாய் ஈடுகட்டி வரமுடியாமையால், அவர்கள் தமது குற்றத்தாலில்லாவிட்டாலும் தாழ்ந்த நிலையை அடைந்தனர். பிழைப்புக்காக வஞ்சகமின்றிக் கஷ்டப்பட்டு உழைப்பவர்களும் அதிக சாமர்த்திய முடைய பிறர் போட்டிக்கு. சமாளிக்க மாட்டாமல் அதோகதியிலேயே இருத்த லென்பது நம் தேசத்தில் பெரிய நகரங்களில் தவிர மற்றெங்கும் உள்ளவர்களுக்குத் தெரியமாட்டாது. ஆனால் அத்தகைய நிலைமைகளெல்லாங்கூட மேல் நாட்டில் நலம்பெற மாறிவருகின்றன. உதாரணமாகத் தொழிலாளர்களுக்கு வயதுகாலத்தில் பென்ஷன் கொடுக்கவும், அவர்களுக்குப் பாடசாலைகளேற்படுத்தவும், அநியாயச் சம்பளம் கொடுத்து அநியாயவேலை வாங்காமல், இத்தனைநேர வேலைக்கு இவ்வளவு சம்பளத்துக்கு குறைதல் கூடாதென்னவும், தொழிலாளர்களின் விச்ராந்திக்குரிய விளையாட்டிடங்கள் மல்லகசாலைகளை ஏற்படுத்திக் கொடுத்து



வசதியான வீடுகளை அமைத்துக் கொடுக்கவும் சட்ட ஒழுங்குகள் நிறைவேறியிருக்கின்றன வென்பதை நாம் கண்ணாரக் காண்கிறோம். இதெல்லாம் அநேகமாக ஜனஸமுதாய ஊழியர்களாலும், தொழிலாளர்களின் ஐக்கிய முயற்சியாலும் ஏற்பட்டவை. இந்தியாவிலோ, கருமம்மெனும் பரமார்த்த உண்மையைச் சரியாய்க் கிரகிக்காததால் தன் விதியைத் தானே நொந்து கொண்டு பிரயத்தனமின்றியிருப்பதோடு, நம் தேசமானது அநேக நூற்றாண்டுகளாக அன்னியருக்குக் கறவைமாடாய்ப் போனதால் ஏற்பட்ட எளிமைத்தனத்தாலும், தள்ளுண்ட வகுப்பாரின் கீழ் நிலைமை கவனிப்பாரற்றுக் கதிமோக்ஷமின்றி அப்படியே உள்ளது. இது வரைக்கும் மூடாசாரத்தில் அழுந்தியிருந்த நம் தேசத்தில் அறிவு விரைவிற் பரவாமலும், சரியான சுதேசிய தர்மத்தை நம் வாழ்நாள் முறையில் நாம் அனுஷ்டிக்காமலுமிருப்பதை நோக்க, எவ்வளவு ஊக்கமுள்ள சீர்திருத்தக்காரனுக்கும் குதூகலம் குறையும் நிலையிலிருக்கிறது. கூடிய மட்டும் அநுபவ சித்தமான மதகிரந்தங்கள் விஷயமாகவும் பாஷ்யார்த்த விவகாரங்களிற் புகுந்து சுயபுத்தியையே பறிகொடுத்ததன் பயனாக நம்மவர்கள் உபயோகமற்ற பூர்வ சம்பிரதாயப்பற்றில் அழுந்தி வெளியேற மாட்டாமற் கிடக்கின்றனர்.

இந்நிலையில் அந்நிய நாட்டுச் சம்பிரதாய முறைகளும் புகுந்து கலக்கின்றன. அவைகளில்லாமலே நம் நிலைமை கேடாய்த்தானிருக்கும். காலச் சுழலால் தள்ளுண்ட வகுப்பார்கள் உன்னத பதவியடைவார்களேயானால், 'உயர் வகுப்பினர்' படவேண்டி வரும் சிக்ஷை மிகச் சரியாய்த்தான் கிடைக்கும். மேனாட்டாரின் சாமர்த்திய முறைகளும் ஜன நாயக ஆட்சியில் அவர்களுடைய வழிகளும் நம் தேசத்தில் புகுந்து வருகின்றன. ஜன ஸமுதாயப் புரட்சியும் ஏற்பட்டு வருகிறது. அதில் ஜாதிகளுக்குப் பதிலாக வேறு வகுப்புக்கள் ஏற்படுகின்றன. அதனால் கீழ் வகுப்பினர்கள் மேல் வகுப்பினர்களிடம் பாராட்டும் த்வேஷமும் நிந்தையும் தீவிரமாகும். இப்புராதன தேசத்து வகுப்பினரின் கல்வி யறிவு ஒழுக்க நாகரிகங்களை மேனாட்டார்கள் தெரிந்து கொள்ள இயலாமலே தங்கள் நாகரிக வழிகளைப் புகுத்தி நிலைபெறச் செய்ய முயலுவர். பாதிரிமார்களின் முயற்சியில் மிக்க தீங்குகள் விளைவதில் தடையில்லை யென்பது யாவருக்கும் தெரிந்ததாகையால் இதை விவரமாய் எழுத வேண்டுவதில்லை.

இவ்வபாயம் வருமென்பதை உயர்வகுப்பார் உணராதவரை ஹிந்து ஸமூஹம் ஒற்றுமைப்படத் தாமஸமாகுமென்பதோடு இல்லாமல் கலகங்கள் அதிகமாகும். இன்னும் விபரீதமான இடையூறுகள் மேன்மேலும் தீவிரமாயும் வேகமாயும் கிளம்பும். ஐரோப்பிய சரித்திரத்தில் நேர்ந்த கலகங்களும் சீர்திருத்தமுறைகளும் எல்லாம் கடைசியாய் இங்கேயும் நேரும். சிறப்பான இவ்விருபதாம் நூற்றாண்டில் கழுவிலேற்றி எரித்தலும், இயந்திரத்தைக் கொண்டு கடகடவென்று எலும்பை நொறுக்கி வதைத்தலும் ஒழிந்தனவாயினும் மதவுன்மத்தமும், அஹங்காரமும், துன்புறுத்தலும் எல்லாம் வரும்.

இதற்கு ஒரே பரிகாரம், தாழ்ந்த வகுப்பார்களைச், செல்வ நிலையிலும், கல்வியறிவு ஒழுக்கங்களிலும் இடைவிடாமல் முன்னுக்குக் கொண்டுவர முயலுவதேயாம். நூற்றாண்டுகளாக இவர்களைக் கவனிப்பாரில்லாமையால், இப்போது தேசம் முன்னேறுவதற்கு இவர்கள் தடையாயிருக்கின்றனர். தென் ஆப்பிரிக்காவிலும் அமெரிக்க ஐக்யமாகாணங்களிலும் பீஜி, ஆஸ்திரேலியாநாடுகளிலும் குடியேறி உள்ள இந்தியர்களைப் பார்த்து அத்தேசத்தார்கள் என்ன சிலாக்கியத்தைக் கண்டு மகிழும்படி அவர்கள் என்ன படித்திருக்கிறார்கள்? அவர்களோ உயர் வகுப்பாரைச் சேர்ந்தவர்களல்ல.

அந்நியநாடுகளிற் குடியேறின இந்தியர்களின் அஜ்ஞானத்துக்கு இதே காரணம். நூற்றாண்டுகளாகத் தங்கள் தொழிலையோ வியாபாரத்தையோ நடத்தச் செல்வமில்லா நிலையிலிருந்தபடியால் அவர்கள் இன்றைக்கும் ஏழைகளாயிருக்கிறார்கள். அவர்கள் இங்கிருந்த காலத்தில் உயர் வகுப்பாரோடு கலக்க நேராமையால் நடையுடைபாவனைகளில் நல்லவைகளைக் கற்றுக் கொள்ளவும் முடியவில்லை, அதன் பயனாக அவர்கள் குடியேறின நாடுகளிலும் துன்பப்படுத்தப் பட்டு, எந்த விதத்திலும் சரீரசுத்திக்கும் மனச் சுத்திக்கும் சாத்தியமில்லாமல், வியாதியிலும், அசுத்தத்திலும் உழன்று, தம்மானத்தைக் காத்துக் கொள்ள மாட்டாதவராய் தம் ஈசுவராம்சம் மலர்ச்சியடையா வண்ணம் பிரதிபந்தகங்களால் சூழ்ந்து கிடக்கிறார்கள். ஓர் தேசத்தாரின் ஆறிலொரு பங்கு ஜனத்தொகை இந்நிலையிலிருப்பதை விட வேறென்ன தாழ்வு அதற்கு வேண்டும்? மேலும் மூடாசாரத்தால் அவர்கள் எழுதப்படிக்கத் தெரியாமலே இருக்கிறார்கள். ஆனால் இந்நாளில் ஏற்பட்டுவரும் இராப்பள்ளிக் கூடங்களாலும் பஞ்சமர் பள்ளிக்கூடங்களாலும் இக்குறை நீக்கப் பெற்று வருகிறது. எனினும் இன்னும் அவசியம்



பிரபலமான முறையில் ஏற்படுத்தி நடத்த வேண்டியதை உத்தேசிக்கையில், இப்பொழுது நடந்திருக்கும் பிரயத்தனங்கள் வெகு அற்பமேயாம். மேல் நாட்டிலானாலும் கீழ் நாட்டிலானாலும் ஓர் தேசம் முன்னுக்கு வரவேண்டுமானால் அதில், தள்ளுண்ட வகுப்பார் இவ்வளவு அதிகமாக இருத்தல் உதவாது. ஆகையால் நம் தேசத்தில் 'தள்ளுண்ட வகுப்பார்களின்' குறைகளை அழித்து நீக்கும் முறையில், அவர்களுக்கு சுகாதாரம், கல்வி இரண்டுக்குமுரிய சாதனங்களை ஏற்படுத்திக் கொடுப்பதோடு அவர்கள் தன் மதிப்புடையவர்களாகி, தம்மிடத்துள்ள ஈசுவராம்சத்தையும் உணருமாறு தக்கவுதவிகளைச் செய்வோமாக.

---

## ஸர்வஜன ஸஹோதரதர்ம விஜயம்.

---

டிசம்பர்-1923 சோதரபாவம் 12-ஆம் வாரம்

இதுவே வருங்காலத்தின் முக்கிய தர்மம். கஷ்டநஷ்டங்கள் எவ்வளவாயினும் அபாயங்கள் எவ்வளவாயினும், 'மநுகுலம் ஒன்றே' என்னும் சோதரவுணர்ச்சி கொள்வோமாயின், அவையாவும் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்குகின்றன.

இல்வாழ்க்கையில் பெற்றோரும், அண்ணன், அக்காள் முதலிய முதியோரும் தம் ஞானத்தாலும் பலத்தாலும் குடும்பத்தைப் பரிபாலிப்பதனாலேயே அதன் சௌக்கியமும் செல்வமும் நிலைப்பன போல மனிதகுலத்தின் க்ஷேம சௌக்கியங்களும், சுகம் செல்வம் ஞானம் முதலியன வாய்ந்தவர்கள் தம்மைவிட வயதிலோ சக்தியிலோ சுகத்திலோ பலத்திலோ, கல்வியிலோ நாகரிகத்திலோ இளைத்தவர்களுக்காக தம் சௌகரியங்களைத் தடையின்றி தியாகம் செய்வதனாலேயே ஏற்படும்.

குடும்பவாழ்விற்கு நாம் ஆதாரமாய்க் கொண்டிருக்கும் தர்மத்தையே, விரிந்த குடும்பமாகிய மனிதகுலத்தில் அப்பியசிப்போமாயின் அது தான்

ஸர்வஜன ஸஹோதரபாவம்.

சகோதரபாவத்தின் முக்கியதத்துவங்களை இந்நாளில் எங்கும் யாவரும் ஒப்புக்கொள்கின்றனர். கயிறு இழுக்கும் விளையாட்டில் தன் கட்சிக்காக 'ஒன்று சேர்ந்து இழுப்பது' பயன்

தரும் என்பது குழந்தைக்கும் தெரிந்ததே. வேலையாள் எவனும் தான் தொழிலாளர் சங்கத்தில் சேர்ந்திருந்து ஒற்றுமையாயிருப்பானாயின் பயன் பெறலாமென அறிந்திருக்கிறான். எந்த வியாபாரியும் தன் தொழிலைக் கூட்டாளிகள் கொண்டு நடத்துவதால் இலாபம் பெறலாம் என்று நிச்சயமறிந்திருக்கிறான். ஓர் தேசத்தின் ராஜாங்கத்தாரும் தமது பிரஜைகளின் சம்மதமறிந்து, ஒத்து நடந்து தேச க்ஷேமத்திற்குரிய சாதனங்களையெல்லாம் பிரஜைகளின் க்ஷேமத்திற்காக முறைப்படுத்திக் கொடுப்பது தான் தம் காரியம் என்பதை உணருகின்றனர்.

## சோதரபாவத்தின் ரகசியம்

'ஒத்து உழைப்போம்' என்ற தன்மை தான் ஸஹோதர தர்மத்தின் இரகசியம். நாம் இப்போது ஒத்துழைக்கும் சில காரியங்களில் மட்டுமல்லாமல், உலகவாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் எல்லா விஷயங்களிலும் ஒத்து உழைத்தலவசியம். சேர்ந்து ஆடும் குழந்தைகளைப் போலும் சேர்ந்து வாழும் தொழிலாளரைப்போலும், வியாபாரத்தலைவர் கூட்டாளிகள் சேர்ப்பதைப் போலும் இராஜாங்கத்தார் பிரஜைகளை ஆளுவதுபோலும் மட்டுமல்லாமல் எம்முறைமையிலும் எதிர்ப்படும் பிறவுயிர் எவற்றிற்கும் நன்மைபயக்கத்தக்கவிதமாய் உழைக்கவேண்டும்.

சிநேகம், ஒத்துழைப்பு இவையே சோதரபாவத்தின் இரகசியமாம். இதை அநுசரித்தே நாம் எக்காரியத்தையும் செய்ய வேண்டும்.

மனிதவர்க்கமெல்லாம் ஓநாய்க் கூட்டமில்லாமல் சகோதரர்களேயாகையால் ஊழியத்தில் தேர்ந்தவன் தான் பெரியவனே அன்றி ஜயத்தை நாடுகிறவனல்ல.

## ஸஹோதரபாவ அநுஷ்டானமுறை

நம் வாழ்வினிலே கடவுளின் அருளையும்
நம் செயலினிலே கடவுளின் திறத்தையும்
நம் விளையாட்டிற் கடவுளின் களிப்பையும்
நம் காரியங்களில் கடவுளின் அழகையும்
நம் ஒழிவினிலே கடவுளின் சாந்தியும்
நம் அறிவினிலே கடவுளின் ஞானமும்
நம் இதயத்திற் கடவுளின் அன்பையும்
கண்டுகொண்டுணர்ந்து வழிபட நினைமின்

ஸஹோதரபாவம் என்பதற்கு தன்முயற்சி வேண்டியதில்லை யென்பது அர்த்தமல்ல. கயிறிழுக்கும் விளையாட்டில்



ஒவ்வொரு குழந்தையும் தன் பக்கத்துக் காரர்களுடைய ஜயத்தைக் கோரித் தன் முழுபலத்தையும் காட்டுவது போல் நாம் எல்லோரும் ஒருங்கே முயன்று உலக முன்னேற்றத்தையும் க்ஷேமத்தையும் விளைவித்தல் வேண்டும். அல்லாது உலகத்தார் நம்மைச் சுமந்து போகட்டும் என்று சொல்லிப் பிறருக்குப் பாரமான சோம்பேறியா யிருத்தல் தகாது.

## மனிதவாழ்வின் கஷ்டம்.

மனிதர்களை ஏழை யென்பானேன்?
நமக்கு ஏழைத்தனமின்னதென்பது தெரியாதா?
மனிதர்களை மூடர்களென்பானேன்?
நமக்கென்ன ஞானம் வந்து விட்டது?
மனிதர்களைக் கெட்டவர்களென்பானேன்?
யாம் நல்லவர்களென்று யார் தான் சொல்லிக் கொள்ளக் கூடும்?

நாம் ஒருவருக்கு ஒருவரே இன்னாரென்று தெரிந்து கொள்ளாமலும் அவரவர் குணங்களைக் கிரகிக்காமலும் அந்நியர்களாய் நடந்து கொள்வதுதான் விசனிக்கத்தக்கது. சோதரபாவத்தை உணர்ந்தொழுகுதலே இதற்கெல்லாம் நிவர்த்தி உபாயம். ஏனெனில் நாம் மற்ற ஜனங்களை மட்டுமின்றி மற்ற சங்கங்களையும் உள்ளபடி தெரிந்து கொள்ள முயல வேண்டும். நம் கொள்கைகள் இலக்ஷியங்கள் காரியங்களுக்கு அவர்களுடையவைகள் எவ்வளவோ வித்தியாசப்பட்டாலும் நாம் கடைசியிற் பூரண நிலையைப் பெறுதற்குச் சாதகமாய்ப் படிப்படியாய் நாகரிகமடையும் முறையில் எல்லோரும் அவரவர்களுக்குரிய நிலையில் இருத்தல் அவசியமேயாகிறது. ஏனெனில்

எவரெவ் வளவு தீயரே யாயினும்
அவரிடத்தும் மிக நலமுள வொன்றை
தேடிப் பிடித்துக் கண்டு கொள்ளாது
மற்றவர் குற்றங் காணுதல் தவறாம்.

## அதிசமீப வருங்காலம்.

உலகத்தில் இக்கால நிலையில் தீர்க்க திருஷ்டியோடு நாம் முன்னினும் பன்மடங்கதிகமாய்ப் பிரயத்தனப்பட்டு சோதர பாவத்துக்கான முயற்சிகளெல்லாவற்றையும் அதிகப் பயன் பெற ஒழுங்குப்படுத்த வேண்டும். ஒவ்வொரு சீலத்தையும், பொதுநலம் பற்றிய ஒவ்வொரு நற்குணத்தையும், வெறும்

பேச்சோடு நில்லாமல் ஆசரணையிற் கொள்ள வேண்டும். பிரசாரமும், பிரசங்கங்களும், உபந்யாசங்களும், துண்டுப் புஸ்தகங்களும் இவை யாவும் பெரிதல்ல. சரிவரச் செய்து முடிக்கும் இதமான கைங்கரியமே போற்றத்தக்கது.

வம்புப் பேச்சை யொழித்து, வேலையைக் கவனி
வெட்டிப் பேச்சை விட்டு உதவியே செய்
குற்றங் கூறாமல் உழைப்பையே கைக்கொள்.

குற்றங் கண்டு பிடிக்கிறதும் தண்டிக்கிறதும் நம் கடமையல்ல. அவசியமானவர்களுக்குத் தண்டனை விதிக்கக் கடவுள் இருக்கிறார். ஆகையால் அக்காரியம் நம்மைச் சேர்ந்ததல்ல.

“உலகில் சுகமாயும் ஆனந்தமாயுமிருப்பவர்கள் யாவர்க்கும் பரகைங்கரியமும் தியாகமும் கடமையாம். ஏழையையும் அறிவிலியையும் பார்த்துத் தியாகம் செய்யச் சொல்லலாகாது. அவர்கள் தாமறியாமலே ஏற்கெனவே அதிகம் தியாகம் செய்தவர்களாயுளர். படிப்பும் நாகரிகமும் சொத்து சுதந்திரங்கள் முதலிய சௌகரியங்களும் வாய்ந்தவர்களே பிறருடைய முன்னேற்றத்தைக் கருதித் தியாகம் செய்ய வேண்டும்.

## சகோதரத்துவம் என்பது யாது?

| | |
|---|---|
| ஸஹோதரத்துவம் | வாழு முறைமையன்றி நம்புங் கோள்கை யல்ல. |
| ” | உண்மையே யன்றி ஏட்டுச் சுரைக்கா யல்ல. |
| ” | சேவலே யன்றிச் சோம்பலல்ல. |
| ” | பிறர் நலம் அன்றித் தன்னலமல்ல. |
| ” | வலியாரை யொப்ப மெலியாரையும் விரும்பும். |
| ” | அறிவினரை யொப்ப அறிவிலரையும் விரும்பும். |
| ” | புண்ணியரை யொப்ப பாவியரையும் விரும்பும். |
| ஸஹோதரத்துவத்தை | பரலோகத்திற்போல் இங்கேயே அடையலாம். |
| ஸஹோதரத்துவத்தை | வருங்காலத்திற்போல் இப்போதே எய்தலாம். |
| ஸஹோதரத்துவத்தை | சிலரைப்போல் பலரும் அனுபவிக்கலாம். |



| | |
|---|---|
| ஸஹோதரத்துவத்தில் | வீட்டாரன்றி வெளி நாட்டாரும் சேர்ந்தவர். |
| ஸஹோதரத்துவத்தில் | மேலோர் யாவும் கீழோர் யாவும் ஒன்றே யாகும். |
| ஸஹோதரத்துவம் | இருப்போராயினும் இறந்தோராயினும் இதனுள்ளடங்குவர். |
| ” | சுதேசியம் போலச் சர்வதேசியமுமாம். |
| ” | கண்டிதம் போலவே அகண்டிதமுமாகும். |
| ” | உயிர் முறைபற்றியும் உடல் முறை பற்றியும் நிலைத்த ஒற்றுமையாம். |
| ” | மெய்யறிவேயன்றி மூடபக்தியல்ல. |
| ” | ஆற்றலே யன்றி அறிவீனமல்ல. |
| ” | ஞானமே யன்றிப் பேதமையல்ல. |
| ” | பெண்ணுக்கும் ஆணுக்கும் பொதுவேயாகும். |
| ” | பண்டித பாமரர்க்கொன்றாய் உரியதே. |
| ” | பேருயிர் யானைபோல் நுண்ணுயிரணுவையும் ஒன்றென நினைத்துக் காப்பதாகும். |
| ” | இன்பமே யன்றித் துன்பமல்ல. |
| ” | நீதியேயன்றி அநீதியல்ல. |
| ” | முயற்சியேயன்றித் தமோகுணமல்ல. |
| ” | அறிவுடைப் பொறுமையே யன்றி அறிவிலா சகிப்பையல்ல. |
| ” | ஒற்றுமையேயன்றிச் சமத்துவமல்ல. |
| ” | நட்பேயன்றி மூடாபிமானமல்ல. |
| சகோதரத்வம் என்பது | எதையும் இயக்கவல்லது, எங்கணும் பரவி நிற்பது, எதையும் அறியவல்லது. |
| சகோதரத்வம் என்பது | எவரிடத்தும், எதனிடத்தும் காட்டப் பெறும் அன்பேயாதும். ஏனெனின், அன்பே சகோதரத்வமாம். |

சகோதர தர்மத்தை யனுஷ்டித்தல் என்பது நாம் கடவுளுடன் கூடி வாழ்தலேயாம்.

சகோதர தர்மமென்பது உயர்வற உயர் நல மமைந்ததோர் லக்ஷியமாகும். அதனை நாம் நம் வாழ்வினால் நம்முடையதாக்கிக் கொள்வோமாக. பற்பல தேசத்தார்களுள்ளும், ஜாதியார்களுள்ளும், மதஸ்தர்களுள்ளும், மிருகங்களுள்ளும், மனிதர் மிருகங்களை நடத்துவதிலும் சோதரபாவமே வேண்டும். இனி எவ்வுயிரும் தன் இனத்திற்கோ பிற இனத்திற்கோ சத்துருவாயிராமல் மித்திரனாகவே விளங்கும்.

இதற்கு வழிகாட்டவேண்டியவன் மனிதனே. மனிதன் தான் மற்றைய ஜீவராசிகளில் சேராமல் தனித்திருப்பவனாக எண்ணுதல் இனி உதவாது. பிராணிகளைத் தன் சௌகரியத்திற்கும் சந்தோஷத்துக்கும் தகுந்தபடி எப்படி வேண்டுமோ அப்படியெல்லாம் உபயோகித்தல் இனித்தகாது. இவ்வெண்ணமும் இதனாலேற்படும் அநீதியும் அப்பிராணிகளுக்கு மட்டுமே யன்றி மனிதனுக்கும் கெடுதலையே செய்கின்றன. மனித விகாஸத்தில் இக்காலத்திய நிலையில் அவைகள் மனிதனின் அறிவை மயக்கி அபிவிருத்தியைத் தடுப்பனவாகும். இந்த தடையை அகற்றினாலொழிய அவன் முன்னேற முடியாது, இத்தடையை நீக்குவதால் முதன் முதல் மனிதர் அஹிம்ஸையைக் கைக்கொள்ளுவர். பிறகு மிருகங்களும் பக்ஷிகளும் கொலைசெய்து தின்பதை நிறுத்தும். மெலிந்தோரை ஹிம்ஸிக்கும் காட்டு மிராண்டி இயற்கை மனிதனிடத்தினின்றொழியும். போர்வெறி அடங்கும், குரூரத்தனம் தொலையும். கொலைத்தொழில் என்ற பிச்ருதனத்தைத்துறந்து ஸோதர பாவம் என்ற ஸம்பத்தைப் பெறுவோம்.

ஸோதரபாவம் வெறும் மனோராஜ்யமல்ல. நியாயமும் ஸாத்தியமுமான வாழ்நாள் முறையேயாம். அம்முறை தன்னலம் பேணுதலல்ல. பின்னை எல்லோர்க்கும் உழைப்பதேயாம். உலகசமாதானத்திற்கு அதுவே நிச்சயமான வழி. கழியும் யுகத்தைச் சேர்ந்தவர்கள் அதைக் கேட்கையில் பரிகசிப்பார்கள், நம்பமாட்டார்கள், பின்பற்றோமென்பர். ஆனால் நவயுகத்தின் குழந்தைகள் உளரே. அவர்களில் ஸ்திரீ புருஷர்களும் சிறுவர் சிறுமியருமே ஜன்மஸாபல்யமடைவர். இவர்களுக்கு வழிதிறக்கும். சோதரபாவம் இவர்களாலேயே நிறைவேறும். இவர்களுடைய ஸன்மார்க்க வாழ்க்கையாலேயே ஸர்வதேசத்தார்க்கும், மனிதவர்க்க முழுமைக்கும், எல்லாவுயிர்கட்குமே சாந்தியுண்டாம்.

## பிரஹ்மஞான கிளைச்சங்கங்களின் காரியம்.

(தொகுதி 14, பகுதி 2, 48வது பக்கத்தின் தொடர்ச்சி)

பிரஹ்ம ஞானக்கிளைச்சங்கங்களில் பொதுவாக நடந்து வரும் காரியங்களைச் சொல்லி, பிறகு இந்த சங்கத்தைச் சேர்ந்து நிலைத்திருப்பவர்களின் பாக்கியத்தைப் பற்றி முன் சஞ்சிகையில் எழுதப்பட்டது. ஸபையைச் சேர்ந்தால் மட்டும் பிரஹ்மஞானிகளாய்விட மாட்டோம். நம்முடைய நோக்கம் மிகவும் மேலானது. அது பலிக்கவேண்டுமானால் அதற்குத் தகுந்த கிரமம் எடுத்துக் கொள்ளல் வேண்டும்.

பகவான் கீதை 4-வது அத்தியாயத்தில் ஞானத்தின் மேன்மையை எடுத்துக்காட்டி, அநேக நாள் கர்மயோகம் செய்ய வேண்டும்; கார்யங்களையெல்லாம் கடவுளுக்கு அர்ப்பணம் செய்து அவருடைய சங்கல்பத்தை நிறைவேற்றுதற்கு ஓர் கருவி என்ற புத்தியுடன் செய்ய வேண்டும்; அப்படிச் செய்யச் செய்ய 'நான் செய்தேன்' 'என்னுடைய காரியம்' என்ற அபிமானமும், காரியம் ஜயமடைந்தால் வரும் க்ஷணிகமான ஸந்தோஷமும், பலிக்கா விட்டால் வரும் துக்கமும், நம்மை அணுகாமல், எப்பொழுதும் உத்ஸாஹம் குறையாமல் ஈசுவர ஞணையைக் கொண்டுசெலுத்துவது கர்மயோகமாகும்; அவ்விதம் செய்யும் கர்மயோகத்தால் நிஜமான சிரத்தை கிடைக்கும்; சிரத்தையால் ஞானம் லபிக்கும் என்கிறார்.

38, 39, சுலோகங்களைப் பார்ப்போம். உண்மையில் இவ்வுலகில் ஞானத்தைப்போல் பாவனமுள்ளது, சுத்தப்படுத்துவது எதுவுமில்லை. யோகத்தில் சித்தியடைந்தவன் காலக்கிரமத்தில் (அனேககால அப்யாஸத்தால்) தானாகவே தன்னிடத்திலே ஞானம் உதயமாவதைக் காண்கிறான். (38)

“சிரத்தை நிரம்பியவன் இந்திரியங்களை வசப்படுத்திக் கொண்டு ஒரேமனதுடன் ஞானத்தை அடைகிறான். பின்னர் சீக்கிரம் பரமமான சாந்தியையடைகிறான்.” (39)

சிரத்தைமட்டும் இருந்தாலும் போதாது. உலகத்தில் அனேக நல்ல காரியங்களில் முதலில் தலையிட்டுக் கொள்கிறவர்கள் சிரத்தாளுக்களாகவேயிருக்கிறார்கள். ஆனால் அந்த சிரத்தை நிலைத்திருக்கிறதில்லை, ஏன்? ஆரம்பத்தில் ஏதோ ஓர் உத்ஸாகத்தில் தொடங்கிவிடுகிறார்கள். ஏதாவது ஓர் இடையூறு நேர்ந்தால் உத்ஸாகம் குறைகிறது. சிரத்தை மறைகிறது. காரியம் குலைகிறது. அது முதலில் சரியான யோசனை செய்யாததால் வரும் தோஷம். இவ்விதம் கடைசிவரையில் நிற்பத

ற்கு பலமில்லாமல் காரியத்தைக் கைவிடுபவர்களை மகாகவி பர்த்ருஹரி மத்யமர்களென்று நிதானித்திருக்கிறார்.

தமோ குணத்தால் எந்தக் காரியத்தையும் எடுத்துக் கொள்ளாதவர்கள் சிலர். என்ன விக்னம் வருமோ, ஏதாகுமோ என்ற பயத்தால் ஒன்றிலும் புகார். அவர்களை நீசர்களென்று பெயரிட்டிருக்கிறார். ஆழ்ந்தயோசனை இல்லாமல் எடுத்துக் கொண்டு கொஞ்சதூரம் சென்றதும் ஏதோ இடையூறு நேர்ந்தால் அதற்குப் பயந்து திடனற்று மயங்கி, காரியத்தை நடைப் பலித்துவிடுகிறார்கள் சிலர். அவர்கள் தான் மத்யமர்கள். என்ன இடையூறுகள் எதிர்ப்பட்டாலும் நிஜமான சிரத்தை, நம்பிக்கையைக் கொண்டு எதிர்த்து கஷ்டப்பட்டு விடாமுயற்சியுடன் காரியத்தைக் கொண்டுசெலுத்துகிறவர்கள் உத்தமர்கள். நாம் அவ்விதம் உத்தம அதிகாரிகளாயிருக்க வேண்டும்.

சிரத்தையெனும் பிரயோஜனமடைய வேண்டுமானால் பகவான் சொல்லுகிறபடி சோம்பலற்று, காரியமே கண்ணாயிருக்க வேண்டும் (தத்பரனாயிருக்க வேண்டும்). ஸதாஜாகரூகனாயிருக்க வேண்டுமானால் புலன்களை (இந்திரியங்களை) அடக்கினவனாயிருக்கவேண்டும். கண், செவி, நாக்கு மூக்கு த்வக்கு (உடம்பு) முதலான இந்திரியங்கள் இழுக்கும் வழிபோய்க்கொண்டிருந்தோமானால் புத்தி எப்படி ஒரேகாரியத்தில் நிலைத்திருக்கும்? ஆகையால் இந்திரியங்களை அடக்கி ஒரே காரியத்தில் கண்ணுற்றவர்களாயிருந்தால் நிஜமான சிரத்தையையடையலாம். அதன் மேல் ஞானம் ஸித்திக்கும். அதைக்குறித்து இன்னொரு சஞ்சிகையில் விசாரிப்போம். (சித்ஸபாவாஸி)

---

## பத்திராதிபர் குறிப்புக்கள்.

கும்பகோணத்தில் வடக்குத்தமிழ் ஜில்லாக்களின் பிரஹ்ம ஞான 'பிடரேஷன்' என்ற மகாநாடு சென்ற அக்டோபர் 20, 21 உ களில் கூடிற்று. அதின் அக்கிராஸனம் டாக்டர் அனிபெஸண்டு அம்மையாரால் வகிக்கப்பட்டது. அவரது பிரதம பிரஸங்கத்தில் அடியில்கண்டபிரகாரம் பிரஹ்மஞான ஸபைசங்கத்தின் கடமைகளைப்பற்றியும் இன்னும் தற்காலத்திற்குரிய முக்கிய விஷயங்களைப் பற்றியும் எடுத்துக் கூறினர். ஒவ்வொருகிளைச்சங்கமும் அதின் உறைவிடமாகிய ஊரில் நிகழும் நற்காரியம் ஒவ்வொன்றுக்கும் ஆதாரவாய் இருத்தல் வேண்டும். பிரஹ்மஞான நூல்களின் வழியாய், ஈசுவரனால் நியமனம் செய்யப்பட்டிருக்கும் பிளான் ஒன்று நமது அறிவுக்குப்புலப்படுகின்றது. பலமூலஜாதியோர்களுடைய லக்ஷணங்



களைப்பற்றியும் கிளை ஜாதியோர்களுடைய லக்ஷணங்களைப் பற்றியும் ஜீவர்கள் விகாஸகதியில் அண்டங்களைச் சுற்றிவருவதைப்பற்றியும் நாம் அறிகின்றோம். இவைபோன்ற விஷயங்களால் நாம் அப்பிளானை தெளிவாக கிரகித்து நமது வாழ்க்கையில் அனுஷ்டிக்க சக்தியுள்ளவர்களாகிறோம்.

விகாஸகதியானது கீழ்நிலையினின்று மேனிலைக்குநேர்கோடு போல் செல்லுகின்றதல்ல. அக்கதியை நாம் உற்று நோக்கின் அது சமுத்திரக்கரையில் ஒன்றின்பின் ஒன்றாக தாக்குகிற்கும் அலைகளை ஒக்கும். முதலில் ஒரு சிறு அலை முன் வந்து ஓய்வடைந்து பின் வாங்கும் போது அதின் பின் ஒரு பெரிய அலை தொடர்ந்து முன் அலையைக்காட்டிலும் அதிக தூரம் சென்று பின் வாங்குவதும் அதின் பிறகு இன்னும் ஒரு பெரிய அலை இரண்டாவதைக் காட்டிலும் அதிக தூரம் சென்று ஓய்வதும் மானிட மூலஜாதியார்கள் ஒருவர் பின் ஒருவர் தோன்றி மேற்போவதற்குரிய உதாரணமாகும். மூலஜாதியார்களுக்குள் விசேஷ வேற்றுமைகள் தோன்றுகின்றன. ஒரு மூலஜாதியின் உபஜாதியார்களுக்குள் சிறிய வேற்றுமைகள் தோன்றுகின்றன. இந்தியாவின் தற்கால நிலை இவ்வுபஜாதியார்களுக்குள் ஏற்படும் முரண்களைக்காட்டுகின்றது.

இந்தியாவின் பிரதம ஜாதியார் ஐந்தாவது மூலஜாதியாரின் முதலாவது உபஜாதியாராகிய இந்துக்கள் ஆவர். ஆங்கிலர் அம்மூலஜாதியாரின் ஐந்தாவது உபஜாதியைச் சேர்ந்தவர். அவ்விரு ஜாதியாரும் கறுமை வெண்மை என்ற வருணவித்தியாஸத்தால் வெளித்தோற்றத்தில் வேறாகத்தோன்றினும் உண்மையில் அவர்களுடைய நாடி அமைப்புமுதலிய சரீர அமைப்பு ஒன்றே. மேனிவருணத்திலும் கூட காஸ்மீர தேசத்தில் வசிக்கும் இந்தியன் ஐரோப்பா கண்டத்தின் தென்பாகமாகிய இத்தாலியா, ஸ்பானியா, கிரேக்தேசங்களில் வசிப்பவர்களைக் காட்டிலும் வெண்மையாயிருக்கின்றான். உபஜாதிகளுக்குள் ஏற்படும் லக்ஷணவேறுபாடுகள் அவர்களுடைய உணர்ச்சிகளையும் மனோபாவங்களையும் தழுவிய அந்தரங்க வேறுபாடுகளாக இருக்கின்றன.

பிரதம உபஜாதியாகிய இந்துக்களிடத்தில் ஸப்த உபஜாதிகளின் லக்ஷணங்கள் அமைந்திருந்த போதிலும் அந்தந்த லக்ஷணங்கள் அவைகளுக்குரிய உபஜாதியார்களிடத்தில் ஆதிக்யம்

பெற்று நிற்கின்றன. நாலாவது உபஜாதியாகிய 'லத்தீன்' ஜாதியார்கள் பற்பல உயர்தரலக்ஷியங்களில் பரவசம் அடையத் தக்கவர்களாயும் சௌந்தரியம் என்பதை எல்லா விஷயங்களிலும் நாடினவர்களாயும் இருக்கின்றனர். ஐந்தாவது உபஜாதியைச் சேர்ந்த ஆங்கிலர்களும், ஜெர்மானியருமோ வென்றால் ரூபமனஸ் என்ற கீழ் மனவின் உயர்தர சக்திகளை வெளிப்படக் காட்டுகின்றனர்.

* * *

ஆனால் இப்போது அமெரிக்கா கண்டத்தின் மேனாட்டிலும், ஆஸ்திரேலியாவிலும் தோன்ற ஆரம்பித்து இன்னும் பல தேசங்களில் அற்பமாய் சிதறுண்டு நிற்கும் ஆறாம் உபஜாதியார்களின் லக்ஷணங்கள் யாவை? அவைகள் ஸ்தூலதேகம் உணர்வு மனம் மூன்றையும் சம்பந்தித்து நிற்கின்றன. அவ்வுபஜாதியைச் சார்ந்த 13, 14 வாலிபர்களை பார்த்தேன். முதல் பார்வையில் அவர்களில் ஒவ்வொருவரையும் பிரத்தியேகமாய் அடையாளம் கண்டு கொள்ள சக்தியற்று நின்றேன். அவர்கள் பஹிர் விஷயங்களில் அஸக்தர்களாய் அவர்களுடைய மனோபாவங்கள் சமநிலை பெற்று உள்ளடங்கி பலத்துடன் கூடினவைகளாயும் மேன்மை யடைந்தவைகளாயுமிருக்கின்றன. அவர்களுடைய மனோநிலையானது மேன்மை பெற்ற அந்தரங்க ஸ்பூர்த்தியால் பிரகாசமடைந்து நிற்கின்றது. அவர்களுக்கு உழைப்புற்ற படிப்புகளில் பிரியமில்லாவிடினும் அவர்களுடைய ஸ்பூர்த்தி விசேஷத்தால் தப்பற்ற அபிப்பிராயங்களை விரைவில் உட்கொள்ளுகின்றார்கள்.

* * *

ஆறாம் உபஜாதி போன்ற ஒரு நூதன உபஜாதி தோன்றுங் காலத்தில் அதற்கு தன் அனுக்கிரகத்தைச் செய்து அதின் கதியில் அதை சாவதானமாய்ச் செல்லும்படி செய்ய ஜகத்குருவானவர் சமீபத்தில் வரக்காத்திருக்கிறார். அவரால் அனுக்கிரகிக்கப்படும் அந்த ஆறாம் உபஜாதியாரின் நாகரிகம் எவ்வாறு அமைந்திருக்கும் என்று நமக்கு தெரிய வேண்டுமானால் இப்பொழுது வாலிபர்களாயிருக்கும் ஜீவர்களை நாம் கவனிக்க வேண்டும். அவர்களுடைய வழிகளை நாம் அறிய வேண்டும். அவர்கள் இந்தியாவிற்குப் புறம்பாகவுள்ள ஐரோப்பிய, அமெரிக்கா தேசங்களில் உற்சாகம் கூடியவர்களா யிருக்கின்றனர். இந்தியாவிலோ வாலிபர்களுடைய உற்சாகத்திற்கு இடம் கொடுக்கப்படவில்லை. ஐரோப்பாவில் வாலிபர்கள் சகோதர பாவத்தைக் கைக் கொண்டவர்களாயிருக்கின்றனர். உலகத்தில் நிகழ்ந்த போர்களும், கலகங்களும் முதிர்ந்தோர்களின், காரியங்களென்றும் தங்களுடையன வல்லவென்றும் சொல்லுகின்றனர். ஜெர்மனி தேசத்திலுள்ள வாலிபர்கள் டம்பங்களை ஒழித்து விட்டு கடினமான வாழ்வை அனுஸரிக்க விரும்புகின்றனர்.



* * *

குழந்தைகளின் பயிற்சி முக்கியமாய் கவனிக்கத்தக்கது, சிறுவர் சிறுமிகளுடைய கல்வி முறையை நன்கு ஆலோசிக்க வேண்டும். 7 வயது முதல் 14 வயது வரையில் மனதைக் காட்டிலும் உணர்வு, மேம்பாட்டை அடைந்து நிற்கின்றது. குணத்தையும், சீலத்தையும் உத்கிருஷ்டமானவர்களின் சரித்திரங்கள் மூலமாய் அவர்களுக்கு போதிக்க வேண்டுமேயல்லாது வாதங்களால் போதித்தல் பயன் தராது. மூளையில் சிந்தனைக்கு உபாதிகளாயுள்ள சில நுண்ணிய உறுப்புக்கள் (cells) உள. அவைகள் ஒன்றொடொன்று 7 வது வயதிற்குப் பிறகு தான் சம்பந்தித்து 14 வது வயதிற்குப் பிறகு பக்குவநிலை பெறுகின்றன. 14 வயதிற்குப் பிறகு தான் மூளை கடினமான சிந்தனைக்குரிய கருவியாகின்றது.

---

## பத்திரிகை விமரிசம்.

**நச்சினார்க்கினியன்:**—இதன் முதற் பகுதியாகிய அக்டோபர் மீ சஞ்சிகை வரப்பெற்றோம். இப்பத்திரிகையின் உரிமையாளரும் ஆசிரியருமான பண்டித ம. கோபால கிருஷ்ண ஐயரை (தமிழ் வித்துவான், நாஷனல் காலேஜ், திருச்சி) 'நம் சிறியோர்க்கு நலம்புரிபவன்' என, அவர் மதுரையில் உழைத்து வந்ததிலிருந்து யாவரும் அறிவர். இப்பத்திரிகையையும் 'நம் சின்னவர்க்கு இனியதாய் இருக்கும்' நோக்கத்துடனே திருச்சியிற் பிறப்பித்திருக்கிறார். தமிழுலகத்திற்கு இவ்வரைப் பரிசயம் செய்வித்தல் வேண்டாவகையால், தமிழ் நேயர்களுக்கு அதன் வருஷச் சந்தா ரூ. 2 ஒரு பெரிய விஷயமல்ல. பத்திரிகை வேண்டியவர்கள் "பண்டித ம. கோபால கிருஷ்ண ஐயர், 'நச்சினார்க்கினிய நிலயம்,' ஆணிமுத்தம்மாள் ஸ்டோர்ஸ், தெப்பக்குளம், திருச்சி" என்ற விலாசத்திற்கெழுதிக் கொள்ளலாம்.

---

## சமாசாரம்.

பிரஹ்மஞான வாலிபர் சங்கம்:—முதன் முதல் ஸ்ரீமான் அருண்டேல் அவர்கள் கோயம்புத்தூரில் சென்ற மீ

21-தேதி ஒரு கிளைச் சபை ஏற்படுத்தினர். அதிலிருந்து இவ்வாலிபர் சங்கம், அடையாறு, ஜார்ஜ் டவுன், கிண்டி, திருச்சி கோமளேசுவரன் பேட்டை, முதலிய பல இடங்களில் இதற்குள் பரவியிருக்கிறது. பம்பாய், சுக்லதீர்த்தம் திருவனந்தபுரம், இந்தூர், காக்கிநாடா, தெய்னாம்பேட்டை, மதனப்பள்ளி, காசி இவ்விடங்களிலும் கூடிய சீக்கிரம் ஏற்படக் கூடியதாயிருக்கிறது. முப்பது வயதுக்குட்பட்ட சிறுவர் சிறுமியரே இதில் மெம்பராகலாம். அதன் காரிய நிர்வாகமும் இப்படிப்பட்ட சிறுவர் சிறுமியர் தாங்களே பார்த்துக் கொள்வர். ஆகையால் வாலிபர்கள் தமக்குரிய வழிகளில் தம் சக்தியைக் கொண்டே தம் மனோபாவங்களை நிறைவேற்றிக் கொள்ளல் சாத்தியமாகும். இந்தியாவில் உள் நாட்டிலும் அயல் தேசத்தார்களுடனும் சோதர முறைமையை விருத்தி செய்தலும் ஜனஸமுதாய க்ஷேமத்திற்கான திருப்பணிகள் செய்தலும் இதன் நோக்கம். அத்திருப்பணிகள் எவையென்றால், இந்து-இஸ்லாமிய ஒற்றுமையை வளர்த்தல், கல்வி பயிற்றல், இராப்பள்ளிக்கூடங்கள், கோதாக்கள் முதலிய விளையாட்டுகளை ஏற்படுத்தி நடத்தல், தாழ்ந்த வகுப்பாரை முன்னேற்றுதல், சுகாதார வழிகளைப் பெருக்குதல், சிறைச் சாலைகளைச் சீர்திருத்தல் முதலியனவாம். இந்தியாவின் பிரஹ்மஞ்ஞான வாலிபர்களனைவர்க்குமாக ஓர் மஹா சபை ஆஸ்டிரேலிய, ஐரோப்பிய தேசங்களை அநுசரித்தே ஏற்பட்டிருக்கின்றது. ஸ்ரீமான் கே. யஸ். செல்வாங்கர், இந்த ஸமாகமத்திற்குத் தற்காலம் ஓர் காரியதரிசியாகவும் ஸ்ரீமான் ட்ரிஸ்டம் என்பவர் அதற்கு பிரசிடெண்டாகவும் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

மேற்குத் தமிழ் ஜில்லாக்களிலுள்ள பிரஹ்மஞானக் கிளைச் சபைகளின் ஸமாகமம் :—இது கோயம்புத்தூரில் சென்றமீ 19, 20-தேதிகளில் ஸ்ரீமான் அருண்டேல் அவர்கள் அக்ராஸனத்தின் கீழ் வெகு உற்சாகமாய் நிறைவேறியது. அவர் 'வாலிபர்களின் சோதர பாவத்தைப்பற்றி கவர்ன்மெண்ட் காலேஜில் ஓர் உபந்யாஸம் செய்த பிறகு, பிரஹ்மஞான ஸபா மண்டபத்தில் ஸ்ரீமான் வி. வி. வெங்கடரமண ஐயங்காரவர்கள் உபசரணைப் பத்திரம் படித்ததும் "கல்வியின் புதிய லக்ஷியங்களைப்"பற்றி அங்கு பேசினர். அவ்வூர்ப் பொது நலத்தில் மிகுந்த ஊக்கமுடைய வக்கீல் ஸ்ரீமான் டி. பி. பாஷ்யாசார்யர் அவ்வூர் 'ஸ்கௌட்ஸ்' என்ற ஒற்றர்களைத்திரட்டி ஸ்ரீமான் அருண்டேலவர்களை எதிர்கொண்டழைத்தனர். மாலை ஒற்றர்களுக்குபசரித்துப் பிறகு 6



மணிக்கு டவுன் ஹாலில், ஸ்வராஜ்யம் அடையும் வழியைப் பற்றிப் பேசிய போது அவ்வூரில் எப்போதும் சேர்ந்திராத பெருஞ் சபை கூடியதாம். 1924-ல் கூட்ட வேண்டிய 'நாஷனல் கன்வென்ஷன்' தான் அவ்வழி யென்றும், ஒத்துழையாமை இயக்கத்தால் வந்த வெகு தீங்குகளை யெடுத்துக் காட்டி, ஸமதம்மையார் ராஜகீயமாகப் பிரவர்த்தித்து வருகையில் ஸ்ரீமான் காந்தி ஜனஸமுதாய ஆசார சீர்திருத்தங்களில் மட்டும் நேர்மையாக உழைத்து வந்திருப்பாராகில் ஸ்வராஜ்யம் இதற்குள் சித்தித்திருக்கும் என்றும் கூறினர். மறுநாட் காலை தாழ்ந்த வகுப்பாரிடத்து நாம் எவ்வாறு சோதரபாவம் காட்ட வேண்டு மென்பதைப்பற்றிப் பேசினர். அடுத்தது பிரஹ்மஞ்ஞான ஸபை மெம்பர்களுக்கு ஓர் உபந்யாஸம். அவர்களில் பஞ்சம ஸஹோதரர்களும் வந்திருந்தனர். அவர்களுக்குத் தமிழில் பிரசங்கம் எடுத்துச் சொல்லப்பட்டது. ஸ்ரீமான் அருண்டேல் அவர்கள் பத்னியாரவர்கட்கு மாதர் இந்திய சங்கத்தார் ஓர் உபசரணைப் பத்திரம் கொடுத்தனர். கவர்ன்மெண்ட் காலேஜ் கல்விக் கழகத்திற்கு "தேசியக் கல்வி"யைப்பற்றிப் பிரசங்கித்தனர். பிறகு பிரஹ்மஞ்ஞான சபைக்குத் திரும்பி வந்து, வாலிபர்களின் பிரஹ்மஞ்ஞான ஸபையொன்று ஏற்படுத்தினர், அதில் பதினாறு பேர்கள் சேர்ந்தனர். அவர்கள் பற்பல துறைகளில் எவ்வாறு உழைக்கவேண்டு மென்பதைப்பற்றிப் பேசிப் பிறகு கடைசியாக ஜகத்குருவின் வருகையைப் பற்றி உபந்யஸித்தார், பிறகு திருச்சூருக்கும், கள்ளிக்கோட்டைக்கும் சென்று மதராசுக்குத் திரும்பினர்.

ஆலப்பிழை, கள்ளிக்கோட்டை, திருச்சூர், எரணாகுளம் இவ்வூர்களிலும் சென்னையிலும் ஸ்ரீமான் அருண்டேலவர்கள் வாலிபர்களை உத்ஸாகப்படுத்தி வாலிபர்களுக்காக பிரஹ்மஞ்ஞானஸபைகளை ஏற்படுத்திய சமயங்களில் பேசியிருப்பதிலிருந்து, உலகிலுள்ள பலதேசங்களில் பழைய நாகரீக முறையால் யுத்தம் விளைந்ததற்கு முதியோர்களே பொறுப்பாளிகளென்றும், அதற்கு வாலிபர்கள் சற்றும் உத்தரவாதிகளல்லரென்றும், வருங்காலத்தில் உலகத்தை சமாதானவழியில் நடத்தி சாந்தியை நிலைக்கச் செய்ய வாலிபர்கள் இப்போது முதலே, உழைப்பையும், படிப்பையும், தன்னடக்கத்தையும், நேர்மையையும் கைக்கொண்டு வருகின்றனரென்றும் தெரியவருகிறது. ஆதியில் இவைகளே மநுவானவர் பிரஹ்மசாரிகளுக்கு விதித்த தர்மங்களாயிருக்க, அவைகளை இந்திய வாலிபர்கள் கைக்கொள்வதில் என்ன தடை யென்று கேட்கின்றனர்.

# கும்பகோணத்தில் டாக்டர் அன்னை வஸந்தையின் விஜயம்.

ஐந்தாவது தடவையாக அன்னையவர்கள் செய்த விஜயத்தில் இப்பட்டணத்துப் பிரமுகர்களான கற்றோரும், மற்றோரும், காலேஜ் ஹைஸ்கூல் பிள்ளைகள் ஏராளமானவர்களும் ஆவலாய்த் திரண்டுவந்து அன்னையவர்கள் முன்னை விடச் சிறிதும் குறையாத ஆர்வத்தோடு செய்த உபந்யாஸங்களைக் கேட்டு மகிழ்ந்தனர்.

வடக்குத் தமிழ்நாட்டுக்குப் பொதுவான பிரஹ்மஞ்ஞான சபையின் சமாகமம் சென்ற மீ 20உ சனிக்கிழமை காலை தொடங்கியதும் உள்ளூர்க் கிளைச்சபையார் படித்த உபசரணைப் பத்திரத்திற்குப் பிரதியாக, கிளைச்சபையின் கடமைகளைப் பற்றி அம்மையார் அழகாய்ச் சுருங்கக் கூறிமுடித்தனர். மாலையில் மாதர் இந்திய சங்கத்தார் தம் தலைவியாராகிய அன்னையவர்களுக்கு சுருக்கமான உபசரணைப் பத்திரமொன்று படித்தனர். இவ்வூரில் கொஞ்சகாலமாக ஸ்திரீகளின் முயற்சி தளர்வுற்றிருந்தாலும், மறுபடியும் நமது அன்னையவர்களை நன் மாதிரியாகக் கொண்டு அவர்கள் ஊட்டிய வீர்யத்தாலே ஸ்திரீகள் தமக்குள் அந்யோந்யப் பழக்கத்திற்கு நாஷனல் இந்தியன் அஸோஸியேஷனையும், நவீன நடவடிக்கைகளில் உழைப்பதற்கு மாதர் இந்திய சங்கத்தையும் மறுபடி கிளைக்கச் செய்வர் என்று நம்புகிறோம்.

ஸரஸ்வதி பாடசாலையிற் பரிசளித்தல் வழக்கம் போல விமரிசையாகவும் பெண்களின் ஆடல்பாடல் முதலிய சாதுரியம் மிகத்தேர்ச்சியாயுமிருந்தன. உள்ளூர்ச் சீமான்களும் ஸ்ரீமதிகளும் தவிர அயல்ஜில்லாக்களிலிருந்து வந்திருந்த அநேகரும் பள்ளிக்கூடத்தின் விமரிசைகளைக் கண்டுகளித்தனர். அழகிய கோலாட்டம், ஆங்கில இன்கவிகளை முறையறிந்து ஒப்பித்தல் இவற்றை நன்கு பழக்கிவைத்த மிஸ்வீலம்மாளுக்கும் அவர் சகோதரியவர்களுக்கும் நன்றி பாராட்டக்கடவோம். இப்பாடசாலையில் ஸம்ஸ்க்ருதப்படிப்பு விசேஷமானது பிள்ளைகள் அமரிக்கையாய் மங்களசுலோகம் சொன்ன அழகும், சுத்தமான உச்சரிப்புடன் பேசி நடித்த ஸம்பாஷணையுமே, பாடசாலை ஸம்ஸ்க்ருதபண்டிதர் நல்ல உத்ஸாஹி என்பதை நிரூபித்தது. இவ்வருஷம் கொடுக்கப்பட்ட பரிசுகளும் எல்லோருக்கும் திருப்திகரமாயிருந்தன. டாக்டர்



பெஸண்ட் அம்மையார் தம் திருக்கரங்களாலே பரிசளித்துக் கூடியிருந்த சபையை நோக்கிப் பிறகு பேசியதில், எவ்வளவோ சிரமத்தின் மேல் அவ்வளவு முன்னுக்கு வந்திருக்கிற அப்பாடசாலையை ஆதரிக்கும் பொறுப்பு அவ்வுள்ளூர்க்காரர்க்கும் அல் அயலார்க்கும் உண்டென்பதையும், அதற்காக ஏற்படுத்தப்பட்ட கம்மிட்டியார்களும் தக்க பரிசிரமமெடுத்துக் கொள்வாராக வென்பதையும் வெளியிட்டனர்.

மாலை 2 மணிக்கு அச்சில்லாவின் மற்றப் பாகங்களாகிய பாபநாசம், ஐயம்பேட்டை, திருக்காட்டுப்பள்ளி இவ்வூர்களிலிருந்து ஸ்கௌட்கள் எனப்படும் ஒற்றர்கள் தங்கள் சாதுரியங்களையெல்லாம் நடத்திக் காண்பித்தனர். அந்த ஜில்லா ஸ்கௌட் கம்மிஷனரும் உள்ளூர் கவர்ண்மெண்ட் காலேஜ் பிரின்சிபாலாகிய ராவ்ஸாஹிப் பி. ராஜகோபால ஐயர் யம். ஏ. அவர்களும் அவ் ஒற்றர்களை உற்சாகத்தோடு வரவேற்றனர். அவ் ஒற்றர்கள் "கும்பகோணமே! விழித்துக் கொள்க" என்று ஒரு பக்கத்திலிருந்து அனுப்பிய செய்தியை மற்றொரு பக்கத்தில் நின்று தெரிந்து கொண்டது எல்லோருக்கும் ஆச்சரியத்தை விளைத்தது. எல்லாத் தேசத்து வாலிபர்களையும் ஸர்வஜீவ ஸஹோதரத்துவத்தை யுணரும்படி செய்வதால் தான் உலகம் வருங்காலத்தில் சாந்தியையும் சமாதானத்தையுமடையும் என்று முடிவுரை கூறி, கும்பகோணத்தாரும் அயலூர்களையொப்ப ஸ்கௌட் முயற்சியை ஆரம்பிக்க வேண்டும் என்று விரும்பினர். கடைசியாக "சுயராச்சியம் அடைதல் எப்படி!" என்பதைப்பற்றி வீரியம் வாய்ந்ததோர் அரிய பிரசங்கம் செய்ததில் அவர் ஆதியோடந்தமாய்ச் சரித்திர முறைப்படி சுதேசத்தின் தற்கால ராஜீய நிலையை படிப்படியாய் எடுத்துரைத்த சாமர்த்தியம் பிறருக்கு எளிதில் வராது, இனி வருங்காலத்தில் முன்னேறுவதற்கான பிரயத்தனம் சட்ட ஒழுங்கை அநுசரித்ததாயிருக்க வேண்டும். இவ்வாறு பக்கத்தில் நின்று பிரவர்த்திப்பதனாலேயே ஜயமடையலாம். நேராக எதிர்த்து கலகத்தை விளைத்தல் பயன் படாது என்றும் சொன்னார்.

மறு நாள் ஸ்ரீமான் அரங்கஸ்வாமி ஐயர் "மதங்களின் சோதரபாவத்தை" பற்றி வந்திருந்த பிரதிநிதிகளுக்கு பிரசங்கித்தார். அன்று மாலையும் ஞானபோதகமான பல சிற்றுபந்யாசங்களை அன்னையவர்கள் செய்தனர். முதலாவதாக தாரக சங்கத்தார்க்கு அந்தரங்க மீட்டிங்கு ஒன்று நடத்தினர். பிறகு 3-45 மணிக்கு உள்ளூர்க்கிளைச் சபையார் நடத்திய

பஞ்சமர் பள்ளிக்கூடத்துக் குழந்தைகளுக்கு பிராமண ஸ்திரீகள் டாக்டர் பெஸண்டம்மாள் சமுகத்தில் அன்ன வஸ்திரங்களளித்தனர். அப்பிள்ளைகள் சொன்ன பாட்டுக்களைக் கேட்டு அம்மையார் மிகவும் சந்தோஷப்பட்டார். மசூலிபட்டணம் ராஜி ஸப் ஜட்ஜ் ஸ்ரீமான் வி. வி. எஸ். அவதானுலு அவர்கள் அன்னதானச் செலவைப் பொறுத்துக் கொண்டனர். நாலு மணிக்கு அம்மையவர்கள் மாணவர்கட்கு மிகச் சிறந்ததோர் உபந்யாஸம் செய்தனர். தன் சொந்த ஊருக்கும் ஜன்ம தேசத்திற்கும், உலகமுழுவதுக்குமே யோக்கியர்களாக வாழுமுறையை நம் தேசச்சிறுவர் சிறுமியர் எவ்வாறு கைக்கொள்ள வேண்டுமென்பதை யெடுத்துக் கூறியதில் நம் தேசத்தின் பூர்வ விருத்தாந்தத்தை யெல்லாம் சொல்லி இக்காலத்தியவர்கள் செல்லத்தக்க மார்க்கத்தை நிரூபித்தனர். சபை நிறைய இருந்த மாணவர்கள் அடிக்கடி கைகொட்டி மகிழ்ந்தானந்தித்தார்கள். 4-45 மணிக்கு நான்கு சிறுவர்களை அன்னையவர்கள் பிரஹ்மஞ்ஞானஸங்கத்தில் சேர்த்துக் கொண்டனர்.

இந்த ஸமாகமத்தில் அன்னையவர்கள் கடைசியாய்ச் செய்த உபந்யாஸம் "சோதரத்துவத்தை எப்படிக் கைக்கொள்ளுத"லென்பது குழந்தைகளைப் பழக்குவதிலும், கல்விமுறையிலும், தொழிலாளர்களின் நிலைமைகளைச் சீர்திருத்துவதிலும் ஸ்திரீகளின் கௌரவத்தை நன்கு மதித்து பூஷிததலும், தீண்டா சாதியார்களை முன்னுக்குக் கொண்டுவருவதிலும் தான் சோதரபாவம் மிக்க அவசியம் என்றார். இதற்கும் ஏராளமான ஜனங்கள் வந்திருந்தனர்

நிகழும் ஸர்வஜன ஸம்ஹாரத தர்ம விஜயத்தைக் கருதி ஒவ்வொருவரும் சோதர பாவத்தைக் கைக்கு மெய்யாகக் கடைப்பிடித்துக் காட்டக் கூடும் என்பதையும், அதற்கு எவரெவர் எவ்வெவ்விதமான உதவி செய்தாலும் நலமே என்பதையும் முடிவாகக் கூறினர்.

கும்பகோணத்தின் பொதுஜன க்ஷேமகரமாக உயர்தர வாழ் நாள் முறைபற்றி அரிய பெரிய விஷயங்கள் 2 நாட்களாக பிரசங்க மயமாய் வருஷிக்கப்பட்டதில் அப்பட்டணத்திற்கு மிக நலமுண்டு. இப்போது நமக்குக் கிடைத்த மாதிரி, ஜீவசக்தியை ஊட்டத்தக்க அன்னையவர்களின் புத்திமதியும் போதனையும் அடிக்கடி பலதரம் பெறவேண்டியதவசியம்.

பேயர் விழையான்.

தமிழ்நாடு ...
210794